**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.301/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-17 | Taluk | : | |
| Name | : | திருமதி.மரு.ஹேமாவதி | Occupation | : | |
| Husband Name | : | திரு. மரு. ஹரிஸ் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 16.9.25**

Both accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது ராசா மிரஸ்தார் மருத்துவமனையில் பட்ட மேற்படிப்பு மகப்பேறு துறையில் படித்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 21.4.2022 அன்று பாபநாசம் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றியபோது பிச்சை த.பெ.ராசு என்பவரின் பிரேதத்தை ஆய்வு செய்ய கபிஸ்தலம் காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின் அடிப்படையில் காவலர் எண் 2892 திரு. பாலமுருகன் என்பவர் மேற்படி நபரின் பிரேத்தை அடையாளம் காண்பிக்க அதன் அடிப்படையில் பிரேத விசாரணை ஆரம்பித்தேன் அப்போது நேரம் 12.55 அந்நார் சுமாரான போசாக்குடைய நபராக காணபட்டார். உடல் முழுவதும் மரண விறைப்பு தன்மை காணபட்டது. அந்நாரின் கருப்பு மச்சம் அடி வயிற்றில் காணபட்டது. வலது கால் முட்டியில் ஒரு காய தழும்பு காணபட்டது, இடது கண்ணிற்கு கீழே ஒரு கருப்பு மச்சம் காணபட்டது. வெளிப்புற சோதனையில் கண்கள் பாதி திறந்தநிலையில் காணபட்டது. மேலும் வாய் மூடிய நிலையில் இருந்தது, காது மூக்கு ஆகிய பகுதிகளிலிருந்து இரத்த கசிவும் எதுவும் வரவில்லை சிவப்பு பழுப்பு நிறத்தில் கடுமையான வெட்டுகாயம் வலது கைமூட்டு பகுதியில் காணபட்டது, அந்த காயம் 8X5X4செமீ அளவில் காணபட்டது. காயம் தோல், தசைகள், இரத்தநாளங்கள், எலும்பு வரை அந்த காயம் இருந்தது.

உள் பரிசோதனையில் இதயம் சாதாரணமாக வெளிரி காணபட்டது, நுரையீரல் வெளிரி காணபட்டது, வயிற்றுபகுதி வெளிரி காலியாக இருந்தது, கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம் வெளிரி காணபட்டது, முதுகுதண்டு நல்லநிலையில் இருந்தது. சிறுநீர்ப்பை சாதாரணமாக காணபட்டது, உடல் கூறாய்வில் முக்கிய பகுதிகளை ஆய்வுக்கு அனுப்பினேன் அந்த ஆய்வில் ஆல்கஹால் இருந்ததாக கருத்து வந்தது, வயிற்றில் 109 மிலி நெடியுடன் கூடிய ஆல்கஹால் இருந்ததாக கருத்துரை வந்தது அதன் அடிப்படையில் நான் அதில் விஷதன்மை இல்லை குடல் மற்றும் கல்லீரல், சிறுநீரகம் சோதனையில் ஆல்கஹால் இருந்ததாக அறிக்கையில் இருந்தது. மேற்படி உள்ளுறுப்புகள் சோதனையில் விஷம் இருந்ததாக ஏதும் கண்டறியப்படவில்லை. அந்நார் அதிர்ச்சி மற்றும் கடுமையான வெட்டு காயத்தினால் ஏற்பட்ட அதிக இரத்தபோக்கின் காரணமாக இறந்திருக்கலாம் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். அந்த சான்று **அ.த.சா.ஆ.8.** ஆகும். விசரா அறிக்கை **அ.த.சா.ஆ. 9** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் ஆயுதத்தால் வெட்டினால் அம்மாதிரியான காயம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை ஆயுதத்தை காண்பித்து விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

என்னிடம் பிரேத விசாரணைக்கு வேண்டுகோள் கொடுத்தபோது வழக்கு சுருக்கம் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். பிண விறைப்பு ஏற்பட எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 24லிருந்து 48 மணிநேரம் ஆகும். பிண விறைப்பு என்பது கால் கட்டைவிரலில் ஆரம்பித்து தலைபோய்க்கு திரும்ப வரும் என்றால் ஆமாம்.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**